# தகவல் அறிதல் தொடர்பான கொள்கை

செப்டெம்பர் 2018

ASIAN DEVELOPMENT BANK

ADB

# தகவல் அறிதல் தொடர்பான கொள்கை

செப்தெம்பர் 2018

ஆசிய அபிவிருத்தி வங்கியின் பொதுமக்கள் தொடர்பாடல் கொள்கை 2011 இன் பிரகாரம் இந்த ஆவணம் ADB யின் பணிப்பாளர் சபையினால் பரிசீலிக்கப்படுவதற்கு முன்னர் பொதுமக்களுக்கு வெளிப்படுத்தப்படுகின்றது.

ASIAN DEVELOPMENT BANK

ADB

© 2018 Asian Development Bank
6 ADB Avenue, Mandaluyong City, 1550 Metro Manila, Philippines
Tel +63 2 8632 4444; Fax +63 2 8636 2444
www.adb.org

All rights reserved. Published in 2018.

Publication Stock No. TCS189627

By making any designation of or reference to a particular territory or geographic area, or by using the term “country” in this document, ADB does not intend to make any judgments as to the legal or other status of any territory or area.

ADB encourages printing or copying information exclusively for personal, educational, and noncommercial use with proper acknowledgment of ADB. Users are restricted from reselling, redistributing, or creating derivative works for commercial purposes without the express, written consent of ADB. Please contact pubsmarketing@adb.org if you have questions or comments with respect to content, or if you wish to obtain copyright permission.

Note:
Corrigenda to ADB publications may be found at http://www.adb.org/publications/corrigenda

For more information, please contact
Information Access Unit
Office of the Secretary
disclosure@adb.org
www.adb.org/site/disclosure/main

This is a typeset version of the official policy paper approved by the Asian Development Bank Board of Directors on 28 September 2018.

| | |
|---|---|
| **உப- தலைவர்** | பாம்பாங்க் சுசன்டோனோ, அறிவு முகாமைத்துவம் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி |
| **வழிநடத்தும் குழு** | நெஸ்ஸிம் அஹமெட், பிரதிப் பணிப்பாளர் நாயகம், நிலைபேறான அபிவிருத்தி மற்றும் பருவநிலை மாற்ற திணைக்களம் (நி.அ.ப.மா.தி.)<br>ஷிறின் ஹமிட், முதன்மைப் பணிப்பாளர், தகவல் முறைமைகள் மற்றும் தொழில்நுட்ப அலுவலகம் (த.மு.தொ.அ.)<br>ஹுன் கிம், பணிப்பாளர் நாயகம், தெற்கு ஆசியத் திணைக்களம் (தெ.ஆ.தி.)<br>டோமோயுகி கிமுரா, பணிப்பாளர் நாயகம், மூலோபாயம், கொள்கை மற்றும் மீளாய்வு திணைக்களம் (மூ.கொ. மீ.தி.)<br>கிறிஸ்தோபர் ஸ்டீபன்ஸ், பொது ஆலோசகர், பொது ஆலோசகர் அலுவலகம் (பொ.ஆ.அ.)<br>விக்கி சி.எல். டான், முதன்மை பணிப்பாளர், தொடர்பாடல்கள் திணைக்களம் (தொ.தி.)<br>வூசொங் உம், பணிப்பாளர் நாயகம், நி.அ.ப.மா. தி.<br>யூஜினு ஜுகுவ், செயலாளர், செயலாளர் அலுவலகம் (செ.அ.) |
| **முதன்மைப் பணிப்பாளர்** | விக்கி சி.எல். டான், தொ.தி. |
| **பணிப்பாளர்** | ஒமணா நாயர், ஊடக மற்றும் வெளி உறவுகள் பிரிவு, தொ.தி. |
| **குழுத் தலைவர்** | கறென் லேன், முதன்மை தொடர்பாடல்கள் நிபுணர், தொ.தி. |
| **குழு உறுப்பினர்கள** | மார்க் க்ரோவ், முதன்மை பதிப்பாசிரியர், செ.அ.<br>குருமி ஃபுகாயா, முன்னணி செயற்பாடுகள் ஒருங்கிணைப்பு நிபுணர், த.து.செ.தி.<br>லெஸ்லீ லாம், ஆலோசகர் மற்றும் தலைவர், முகவர்களுக்கு இடையேயான உறவுகள் மற்றும் இறையாண்மை அல்லாத செயற்பாடுகள் அலகு, மூ.கொ.மீ.தி.<br>லஜயில்யா நாசர்பெகோவா, முதன்மை ஆலோசகர், பொ.ஆ.அ.<br>பிரான்செஸ்கோ டோர்னி, முதன்மை சமூக அபிவிருத்தி நிபுணர், தெற்கு ஆசிய திணைக்களம்<br>பற்றிக் வேர்மேஜ், தகவல் தொழில்நுட்ப நிபுணர், த.மு.தொ.அ.<br>நிக் அஞ்ஜெலோ விலாலூஸ், தொடர்பாடல்கள் அலுவலர், தொ.தி. |

இந்த ஆவணத்தில் எந்த நாட்டு நிகழ்ச்சித்திட்டம் அல்லது மூலோபாயத்தைத் தயாரிப்பதில், எந்தத் திட்டத்திற்கும் நிதியிடுவதில், அல்லது ஒரு குறிப்பிட்ட பிரதேசம் அல்லது பூகோளப் பகுதிகளை மேற்கோள் காட்டுவதில் அல்லது பெயரிடுவதில், ஆசிய அபிவிருத்தி வங்கி எந்த பிரதேசத்தினது அல்லது பகுதியினது சட்டபூர்வமான அல்லது வேறுவிதமான அந்தஸ்தைப் பற்றி எந்த தீர்ப்பையும் மேற்கொள்ள எண்ணவில்லை.

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| | **சுருக்கக் குறியீடுகள்** | **vi** |
| **I.** | **பின்னணி** | **1** |
| **II.** | **கொள்கை அறிமுகம்** | **6** |
| **III.** | **கொள்கை கோட்பாடுகள் மற்றும் விதிவிலக்குகள்** | **7** |
| அ. | கொள்கை கோட்பாடுகள் | 7 |
| ஆ. | வெளிப்படுத்தலுக்கான விதிவிலக்குகள் | 9 |
| இ. | பொது நலன் புறக்கணிப்பு (நேர்மறையான புறக்கணிப்பு) | 15 |
| ஈ. | ஆ.அ.வ. யின் அணுகலை கட்டுப்படுத்துவதற்கான தனிச்சிறப்புரிமை (எதிர்மறையான புறக்கணிப்பு) | 15 |
| உ. | வரலாற்றுத் தகவல்கள் | 15 |
| **IV.** | **தகவல் கோரல்கள் மற்றும் மேன்முறையீடுகள்** | **17** |
| அ. | தகவல் கோரல் | 17 |
| ஆ. | தகவல் அறிதலுக்கான குழு | 18 |
| இ. | மேன்முறையீடுகள் | 18 |
| ஈ. | தகவல் அறிதலுக்கான கொள்கைக்கும் ஏனைய கொள்கைகளும் இடையேயான தொடர்பு | 20 |
| உ. | இணக்க ஆய்வு | 21 |

V. கொள்கை கண்காணிப்பு மற்றும் திருத்தங்கள் 22

VI. கொள்கை நடைமுறைப்படுத்தற் திகதி 23

# சுருக்கக் குறியீடுகள்

| | | |
|---|---|---|
| ஆ.அ.வ. | – | ஆசிய அபிவிருத்தி வங்கி |
| த.அ.கு | – | தகவல் அறிதலுக்கான குழு |
| த.அ.கொ. | – | தகவல் அறிதல் தொடர்பான கொள்கை |
| சு.மே.கு. | – | சுயாதீன மேன்முறையீட்டு குழு |
| பொ.தொ.கொ. | – | பொதுமக்கள் தொடர்பாடல் கொள்கை |

# I. பின்னணி

1. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ஆ.அ.வ.) பொது தொடர்பாடற் கொள்கை 2011 (பொ.தொ.கொ.) பணிப்பாளர்கள் சபையினால் 2011 அக்டோபர் 25 ஆந் திகதியன்று ஒப்புதல் அளிக்கப்பட்டு 2012 ஏப்பிரல் 2 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வந்தது. இந்த மீளாய்வு இந்தக் கொள்கைக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டது.

2. **மீளாய்வு செயல்முறை.** இந்த பொ.தொ.கொ. மீளாய்வு இந்த செயல்முறை தொடர்பில் மூலோபாய வழிகாட்டலை வழங்குவதற்கு ஒரு வழிகாட்டற் குழுவொன்று ஜூலை 2016 இல் தாபிக்கப்பட்டமையுடன் தொடங்கியது. ஆ.அ.வ., 2016 ஆம் ஆண்டில், பொ.தொ.கொ. பற்றிய ஒரு மேசை ஆய்வினையும் பிற பன்முக அபிவிருத்தி வங்கிகளின் ஒரு சக மதிப்பீட்டினையும், உள்ளக ஆலோசனைகளைத் தொடர்ந்து நடாத்தியது. ஒரு பொ.தொ.கொ. மீளாய்வு இணையத்தளம் ஏற்படுத்தப்பட்டு அதில் முன்மொழியப்பட்ட புதிய கொள்கை பற்றிய கலந்துரையாடல் வரைபு மற்றும் அதன் செயற்பாட்டு ஒழுங்குகள் 2016 ஆம் ஆண்டு நவம்பரில் பொதுக் கருத்துக்களுக்காக பதிவிடப்பட்டன.[1] ஆ.அ.வ. 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மற்றும் 2017 ஆம் ஆண்டு ஜுன்-ஜுலை இல் 16 நாடுகளிலும் ஒரு பிராந்தியத்திலும் வெளிநாட்டு பங்குதாரர்களுடன் கலந்துரையாடல்களை நடாத்தியது.[2] இரண்டாவது கலந்துரையாடல் வரைபு இணையத்தளத்தில் 2018 ஆம் ஆண்டு பெப்பிரவரியில் பதிவிடப்பட்டது. ஆ.அ.வ. யின் பணிப்பாளர்கள் சபை முறைசாரா வகையில் 2017 ஆம் ஆண்டு ஏப்பிரலிலும் 2018 ஆம் ஆண்டு ஏப்பிரலிலும் கலந்தாலோசிக்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டு ஜூலையில் ஒரு கொள்கைப் பணித்தாள் இணையத்தளம் மற்றும் பணிப்பாளர் சபைக்குக் கிடைக்கச் செய்யப்பட்டது.

3. **கொள்கை மீளாய்வு.** கொள்கை மீளாய்வு, பொ.தொ.கொ. யின் கோட்பாடுகள் மற்றும் வெளிப்படுதல் விதிவிலக்குகள் தவிர பிற பன்முகப்பட்ட அபிவிருத்தி வங்கிகள் மற்றும் பல நாடுகளில் உள்ள

---

[1] ஆ.அ.வ. 2016. *பொதுத் தொடர்பாடல்கள் கொள்கை மீளாய்வு.* https://www.adb.org/site/disclosure/pcp-review

[2] கலந்துரையாடல்களின் ஒழுங்கில்: பங்காளதேஷ், நேபால், பிலிப்பைன்ஸ், தஜிகிஸ்தான், தாய்லாந்து, கம்போடியா, லாவோ மக்கள் ஜனநாயகக் குடியரசு, வியட்நாம், கனடா, அமெரிக்கா (யு.எஸ்), ஐரோப்பா (ஜேர்மனியில் இருந்து), அவுஸ்ரேலியா, திமோர்-லேஸ்ட், பிஜி, இந்தியா, அஜர்பைஜான், மற்றும் ஜோர்ஜியா.

நிலைப்பாடுகளுடன் இணங்கி இருப்பதனைக் காட்டியது. மற்றைய பன்முகப்படுத்தப்பட்ட அபிவிருத்தி வங்கிகள், தகவல் வெளிப்படுத்தலுக்காக தற்பொழுது சிறந்தனவாக கருதப்படுகின்ற, கோட்பாடுகளை-அடிப்படையாகக் கொண்ட கொள்கைகளை நோக்கி நகர்வதனையும் கூட கண்டறிந்துள்ளது. மேலும், பொ.தொ.கொ. பற்றிய வருடாந்த மதிப்பீடு ஆ.அ.வ. யின் இணையத்தளத்தில் (www.adb.org) வெளியிடப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கையில் ஒரு அதிகரிப்பினைக் காட்டியது. எவ்வாறாயினும், மதிப்பீடுகள் ஆவண வெளிப்படுத்துகை சிலசமயங்களில் தாமதிக்கப்பட்டு இருந்தமையையும் கூடக் காட்டியது, ஏனெனில் குறிப்பாக 2011 ஆம் ஆண்டில் பொ.தொ.கொ. ஒப்புதலளிக்கப்பட்டதில் இருந்து அறிமுகப்படுத்தப்பட்ட உற்பத்திப்பொருட்கள் மற்றும் ஆவண வகைகள் தொடர்பிலான வெளிப்படுத்தல் தேவைகள் பற்றி பணியாளர்கள் அறியாமல் இருந்தமை, மற்றும் கொள்கையில் அவை எழுதப்பட்டு இருந்திராமை.

4. இந்த மீளாய்வு, தகவல் கோரல்கள் மற்றும் மேன்முறையீடுகள் செயல்முறைகள் நன்றாக செயற்படுவதனையும் கூட கண்டறிந்திருந்தது. 2017 ஆம் ஆண்டில், ஆ.அ.வ. 3,653 தகவல்களுக்கான முறையான கோரிக்கைகளைப் பெற்றிருந்தது, இது 2012 ஆம் ஆண்டில் பெறப்பட்ட 230 கோரிக்கைகளில் இருந்து ஒரு கணிசமான அதிகரிப்பு.[3] 2017 ஆம் ஆண்டில், ஆ.அ.வ. 81% கோரிக்கைகள் கோரப்பட்ட 5 நாட்களினுள் ஏற்றுக்கொள்ளப்பட்டும் 96% கோரிக்கைகளுக்கு 20-நாட்கள் காலக்கெடுவினுள் பதிலளிக்கப்பட்டும் இருந்தன. தகவலுக்கான ஏழு கோரிக்கைகள் மறுக்கப்பட்டன, அவற்றினுள் ஆறு கோரிக்கைகள் பிணை பத்திரங்கள் பற்றிய பிரச்சினைகள் தொடர்பாக நிதி ரீதியான உணர்திறன்மிக்க தகவல்கள் தொடர்பானவையாக இருந்தன. ஒரு விடயம், 2016 ஆம் ஆண்டில் இருந்தவாறு, 2017 ஆம் ஆண்டில் மேன்முறையீடு செய்யப்பட்டிருந்தது.[4]

5. **முன்மொழியப்பட்ட கொள்கை மாற்றங்கள்.** இந்த பொ.தொ.கொ. ஒரு விதிகள்- அடிப்படையிலான அணுகுமுறையை வெளிப்படுத்தல்களுக்குப் பயன்படுத்துகின்றது. இது மிகவும் எதிர்பார்க்கக்கூடிய விடயங்கள் மற்றும் சந்தர்ப்பங்களை கைப்பற்றுவதனை நோக்கமாகக் கொண்ட விரிவான வழிகாட்டல்களை முன்தீர்மானிக்கப்பட்டு கண்டிப்பாக குறித்துரைக்கப்பட்ட வெளிப்படுத்தல் விதிவிலக்குகள் மற்றும் நேரவரையறைதளுடன் வழங்குகின்றது. இந்த விதிகள்- அடிப்படையிலான கொள்கை வெளிப்படுத்தல்களைத் தகவல் பகிர்விற்கு ஒரு திடமான அணுகுமுறை ஊடாக நிர்வகிக்கின்றது. எவ்வாறாயினும், ஆ.அ.வ. யின் வணிகம், வங்கி துரிதமாக- மாறிவரும் பிராந்தியமொன்றின் தேவைகளுக்கு ஏற்றவாறு பின்பற்றி வருவதனால், மாறி வருகின்றது. ஆ.அ.வ. யின் வெளிப்படுத்தல்

---

[3] ஆ.அ.வ. 2016. *பொதுத் தொடர்பாடல்கள் கொள்கை ஆண்டறிக்கை* 2017. https://www.adb.org/sites/default/files/institutional-document/424291/pcp-annual-report-2017.pdf

[4] https://www.adb.org/site/disclosure/pcp-implementation/appeals/appeals-received

கொள்கை இந்த துரித பரிணாம வளர்ச்சிக்கு பொருந்த வேண்டிய தேவை உள்ளது. விதிகள்- அடிப்படையிலான அணுகுமுறைகள் மாற்றங்களுக்கு விரைவாகப் பின்பற்றப்படுவதற்குப் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நெகிழ்வற்றதாக உள்ளன. இது சில சமயங்களில் திட்டமிடப்பட்ட கொள்கைக் குறிக்கோள்களுடன் ஒவ்வாத விளைவுகளை உருவாக்கக்கூடும் - வெளிப்படுத்தல் மற்றும் தகவல் பகிர்விற்கு ஆதரவான ஒரு அநுமானம் - அது பங்குதாரர்கள் ஆக்கபூர்வமான உத்திகள் மற்றும் பின்னூட்டல்களை அனுமதிப்பதற்குப் போதுமான நேரமாக இருக்கின்றது.

6. ஆகையால், சக நிறுவனங்களின் வரிசையில், ஆ.அ.வ. ஒரு இரண்டு- பகுதி வெளிப்படுத்தல் கொள்கை கட்டமைப்பினை முன்மொழிகின்றது; (i) ஆ.அ.வ.யின் பணிப்பாளர்கள் சபையினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஒரு கோட்பாடுகளின் அடிப்படையிலான கொள்கை, இந்த மடலில் விவரிக்கப்பட்டவாறு; மற்றும் (ii) ஆ.அ.வ. யின் சாதாரண செயல்முறைகளுக்கு இணங்க, ஆ.அ.வ. யின் செயற்பாட்டு கையேட்டில் பகிரங்கமாகக் கிடைக்கக்கூடியதாக பகிரப்பட்டுள்ள முகாமைத்துவத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட விபரமான செயற்பாட்டு ஒழுங்குகள்.

7. ஒரு பயனுறுதியான கோட்பாடுகள்- அடிப்படையிலான அணுகுமுறை, தெளிவான கொள்கைகள் மற்றும் முன்னெச்சரிக்கையான மற்றும் ஆ.அ.வ. மற்றும் அதன் பங்குதாரர்களிடையே கூட்டுத் தொடர்பாடல்களை கோருகின்றது. அதற்கு பணியாளர்கள் மற்றும் பங்காளர்களுக்கு கிரமமான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு அதிகரிப்பு, அத்துடன் கோட்பாடுகள் முறையாக, சீராக, மற்றும் நல்ல நம்பிக்கையில் பிரயோகிக்கப்படுவதனை உறுதிப்படுத்தப்படுவதற்கான ஒரு தெளிவான மேன்முறையீட்டு செயல்முறை ஆகியனவும் கூட தேவையாக இருக்கின்றது. தீவிர கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல், பணிப்பாளர்கள் சபைக்கானது உட்பட, கொள்கை கோட்பாடுகள் பயனுறுதியாகவும் சீராகவும் எட்டப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு அவசியமானதாக இருக்கின்றது. இந்த கொள்கை, செயற்பாட்டு ஒழுங்குகள், கண்காணிப்பு அறிக்கைகள் மற்றும் ஏனைய தொடர்பான தகவல் ஒரு தனி ஆ.அ.வ. இணையத்தளத்தின் ஊடாக தொடர்ந்து கிடைக்கக்கூடியதாக இருக்கும்.[5]

8. முன்மொழியப்பட்ட கொள்கை, ‘‘தெளிவான, சமயத்திற்கேற்ற, மற்றும் பொருத்தமான வெளிப்படுத்தல்களின்’’ ஒரு புதிய நீண்டு வளையும் கோட்பாடுகளினால் வழிநடத்தப்படும் கோட்பாடுகளின் மீது கவனம் செலுத்துகின்றது. ஏனைய கொள்கைகள் பொ.தொ.கொ. யில் இருந்து பெரிதும் மாற்றம் அடையாது இருப்பதோடு மட்டுப்படுத்தப்பட்ட விதிவிலக்குகளுடன் வெளிப்படுத்தலுக்கு ஆதரவான ஒரு அனுமானத்தினால் கட்டப்பட்டிருக்கின்றது. முன்னோக்கிச் செல்லும் போது, கொள்கை கோட்பாடுகள் சபையினால் மாற்றப்படுகின்ற வரையில் தொடர்ந்து

[5] https://www.adb.org/site/disclosure/main

இருப்பதோடு, புதிய உற்பத்திப்பொருட்கள் மற்றும் செயல்முறைகளை பிரதிபலிப்பதற்கு, எடுத்துக்காட்டாக- ஆ.அ.வ. யின் முகாமைத்துவத்தின் ஒப்புதலுடன், செயற்பாட்டு ஒழுங்குகள் தேவைப்படுகின்ற போது புதுப்பிக்கப்பட முடியும்-. இந்த மாற்றமானது செயலாக்கத் தெளிவு மற்றும் வெளிப்படுத்தல் முன்கணிப்பை உறுத்திப்படுத்த வேண்டும், எந்த ஆவணங்கள் மற்றும் எப்பொழுது வழக்கமாக வெளிப்படுத்தப்பட வேண்டும் என எண்ணப்படுகின்றது என்பன தொடர்பில் ஆ.அ.வ. க்கு காலம்தவறாது கொள்கை வினைத்திறனை மேம்படுத்துவதற்கு உதவுவதற்கு புதுப்பிக்கப்பட்ட வழிகாட்டிகளை வழங்கும், சுயாதீனமான மதிப்பீட்டு அறிக்கைகளை வெளிப்படுத்துவது தொடர்பிலான, செயற்படுத்தல் ஒழுங்குகள், பூர்த்தியாக்கப்பட்ட அறிக்கைகள்[6] அல்லது எதிர்காலத்தில் யாதாயினும் சபை- ஒப்புதலளிக்கப்பட்ட ஆ.அ.வ. யின் சுயாதீன மதிப்பீட்டு திணைக்களத்தினை ஆளும் கொள்கையில் தேவைப்படும் பிற ஒழுங்குகள் பற்றிய வெளிப்படுத்தலின் தற்போதைய நடைமுறையை பிரதிபலிக்கும்.

9. பொ.தொ.கொ. யில் இருந்தான ஏனைய முன்மொழியப்பட்ட மாற்றங்கள், காலாவதியான, பின்னணி தகவல் பிரிவுகள் அகற்றப்படல், மற்றும் ஆ.அ.வ. யின் பொது தொடர்பாடல் பிரிவினையும் உள்ளடக்கும். ஆ.அ.வ. யின் பொது தொடர்பாடல்கள் அணுகுமுறை வங்கியின் நிறுவனம்சார் தொடர்பாடல்கள் நடைமுறைகளை விபரிக்கின்றது. தொடர்பாடல் அணுகுமுறைகள் புதிய தொடர்பாடல்கள் தடங்கள் தோன்றல் மற்றும் இலக்குப் பார்வையாளர்கள் பரிணாம வளர்ச்சி அடைவதனால் துரிதமாக மாறக்கூடியன. இந்த செயற்பாடுகள் வெளிப்படுத்தப்பட்டவைகளில் இருந்து கணிசமான அளவு வேறுபடுவதனால், அவை புறம்பானதொரு ஆவணத்தில் விபரிக்கப்பட்டு ஆ.அ.வ. யின் தகவலுக்கான அணுகல் இணையத்தளம் (அடிக்குறிப்பு 5) கிடைக்கச் செய்யப்படும்.

10. பொ.தொ.கொ. க்கான மெருகேற்றல்களின் பார்வையில், கொள்கை தகவல் அறிதலுக்கான கொள்கை (த.அ.கொ.) என மறுபெயரிடப்பட்டது. புதிய பெயர் அதிக கவனம் செலுத்தப்பட்ட தகவல் வெளிப்படுத்தல் மற்றும் கொள்கையின் தகவல் வழங்கல் குறிக்கோள்களை சிறப்பாக விபரிக்கின்றது. இந்த பெயர் மாற்றம் சக அபிவிருத்தி வங்கிகளின், குறிப்பாக கோட்பாடுகள்-மையப்பட்ட கொள்கைகளுடன், இணங்கியிருக்கின்றது.

11. முதலாம் மற்றும் இரண்டாம் கலந்துரையாடல் வரைபுகள் மற்றும் பணித்தாள் தொடர்பாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட கருத்துக்களின் அடிப்டையில், இந்த ஆர்-பத்திரிகை ஆ.அ.வ. யின் பணிப்பாளர்கள்

---

[6] தற்போதைய நடைமுறையின் கீழ், அனைத்து சுயாதீன அறிக்கைகளும், சுயாதீன மதிப்பீட்டு திணைக்கள வருடாந்த மதிப்பீட்டு மீளாய்வு அறிக்கைகள், அவை பணிப்பாளர்கள் சபையினால் கலந்துரையாடப்பட்டு 14 நாட்களினுள் வெளியிடப்படுவன, தவிர்ந்த, பூர்த்தியாக்கப்பட்ட 14 நாட்களினுள் வெளியிடப்படுவதுடன் முகமைத்துவத்திற்கும் பணிப்பாளர்கள் சபைக்கும் பரப்பப்படும்.

சபையின் பரிசீலனைக்காக தயாரிக்கப்பட்டது. ஒப்புதல் அளிக்கப்பட்டால், புதிய கொள்கை 2019 ஜனவரி 1 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும். அமுலாக்க ஒழுங்குகள் ஆ.அ.வ. யின் முகாமைத்துவத்தினால் ஒப்புதலளிக்கப்பட்டு அதேநேரத்தில் கொள்கையாக அமுலுக்கு வரும்.

12. **வளங்கள்.** உள்ளக மற்றும் வெளிவாரி வெளியெட்டலுக்காக தொடக்கப் பாதீடு, விழிப்புணர்வினை- அதிகரித்தல், மொழிபெயர்ப்பு, மற்றும் பணியாளர் பயிற்சி ஆகியன புதிய த.அ.கொ. யின் சுமூகமான பரம்பலை உறுதிப்படுத்துவதற்கு ஒதுக்கப்பட்டு இருக்கின்றது. த.அ.கொ. யின் அமுலாக்கத்திற்கு செயலாளரின் அலுவலகம் முழுப் பொறுப்புனையும் ஏற்றுக்கொள்ளும். இரண்டு மேலதிகமான பணியாளர் பதவிநிலைகள்- ஒரு சர்வதேசத்தவர் மற்றும் ஒரு தேசியம்சார்ந்தவர்- இனங்காணப்பட்டு த.அ.கொ. யினை கையாள்வதற்காக ஒதுக்கப்படும். த.அ.கொ. யின் அமுலாக்கத்திற்கான மேலதிகமான வளத் தேவைகள் வருடாந்த பாதீடு தயாரிப்பு மற்றும் ஒதுக்கீட்டு செயல்முறை இந்தக் காலப்பகுதியில் உறுதிப்படும்.

# II. கொள்கை அறிமுகம்

13. இந்த தகவல் அறிதலுக்கான கொள்கையின் குறிக்கோள் (த.அ.கொ.) ஆசிய அபிவிருத்தி வங்கியில் (ஆ.அ.வ.) பங்குதாரா்களின் நம்பிக்கையை மேம்படுத்துதல் மற்றும் ஆ.அ.வ. யினது செயற்பாடுகளின் அபிவிருத்தித் தாக்கத்தினை அதிகரித்தல் ஆகும். இந்தக் கொள்கை வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், மற்றும் ஆசியா மற்றும் பசுபிக்கில் ஆ.அ.வ. – உதவியளிக்கப்பட்ட அபிவிருத்தி செயற்பாடுகளில் பங்குதாரா்களின் பங்கேற்பு ஆகியவற்றில் ஆ.அ.வ. யின் உறுதிப்பாட்டினைப் பிரதிபலிக்கின்றது. அது ஆ.அ.வ. யின் செயற்பாடுகள் பற்றிய தகவலை தேடுவது, பெற்றுக்கொள்வது, மற்றும் தெரிவிப்பதற்கான மக்களின் உரிமைகளையும் அங்கீகரிக்கின்றது.

14. ஆ.அ.வ. யினால் உருவாக்கப்படுகின்ற, அதன் கடனாளிகள் அல்லது வாடிக்கையாளா்களினால் தயாரிக்குமாறு வேண்டப்படுகின்ற, அல்லது ஆ.அ.வ. யின் செயற்பாடுகளின் போது மற்றைய தரப்பினா்களினால் தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்ற ஆவணங்கள் மற்றும் தகவல்களுக்கும் இந்தக் கொள்கை பொருந்தும். இந்தக் கொள்கை ஆ.அ.வ. யின் முகாமைத்துவத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட விரிவான ஒழுங்குகளுக்கு இணங்க செயல்படுத்தப்படுவதுடன் ஆ.அ.வ. யின் சாதாரண செயல்முறைகளுக்கு இணங்க பகிரங்கமாக கிடைக்கச் செய்யப்படும்.[7]

[7] ஆ.அ.வ. யின் கொள்கைகளுக்கான செயல்படுத்தல் ஒழுங்குகள் ஆ.அ.வ. யின் *செயற்பாடுகள் கையேட்டில்* (அவ்வப்போது திருத்தப்பட்டவாறு) செயல்பாடுசாா் செயல்முறைகளின் கீழ் வழங்கப்படுகின்றன.

# III. கொள்கை கோட்பாடுகள் மற்றும் விதிவிலக்குகள்

## அ. கொள்கை கோட்பாடுகள்

15. இந்த த.அ.கொ. பின்வரும் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது:

(i) **தெளிவான, சரியான நேரத்தில், பொருத்தமான வெளிப்படுத்தல்.** ஆ.அ.வ. அதன் செயற்பாடுகள் பற்றிய தகவல்களை ஒரு தெளிவான, சரியான நேரத்தில் பொருத்தமான விதத்தில் பங்குதாரர்களின் திறன்களை ஆ.அ.வ. யுடன் அர்த்தமுள்ள முறையில் ஈடுபடுத்தி நல்லாட்சியை ஊக்குவிக்கும் பொருட்டு வெளிப்படுத்துகின்றது.

(ii) **வெளிப்படுத்தலுக்கு ஆதரவான துணிபு.** இந்த கொள்கையில் குறிப்பிடப்பட்ட வெளிப்படுத்தலுக்கான விதிவிலக்குகளுக்குள் அந்தத் தகவல் வரவில்லையெனில் ஆ.அ.வ. அந்தத் தகவலை வெளியிடும்.

(iii) **வரையறுக்கப்பட்ட விதிவிலக்குகள்.** தகவலின் முழுமையான வெளிப்படுத்தல் எப்பொழுதும் சாத்தியமில்லை. உதாரணமாக, ஆ.அ.வ.இ எண்ணக்கருக்களை ஆராயவும், தகவல்களைப் பகிர்ந்து கொள்ளவும், நேர்மையான கலந்துரையாடல்களை நடாத்தவும், எண்ணங்களை உள்வாரியாக அதன் உறுப்பினர்கள் அல்லது வாடிக்கையாளர்களிடம் சுதந்திரமாக விவாதிக்கவும் வேண்டும். ஏனைய சந்தர்ப்பங்களில், ஆ.அ.வ. அதன் இறையாண்மை அல்லாத செயற்பாடுகள் மற்றும் வாடிக்கையாளர்களின் சிறப்புத் தேவைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும், தனிநபர்களின் அந்தரங்கத்திற்கான உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும்,[8] அல்லது அதன் சொந்த

[8] வாடிக்கையாளர்களுடனான வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு வாடிக்கையாளர்களின் இரகசியமான வியாபாரத் தகவலை வெளியிடாதிருப்பதற்கான சட்டபூர்வமாக பிணைக்கப்பட்ட பொறுப்பு தனியார்த்துறை நிதி நிறுவனங்கள், அத்துடன் ஆ.அ.வ. யின் ஒப்பீட்டாளர்களுக்கு ஒரு தரநிலையான தேவையாகும். இரகசியமான வியாபாரத் தகவலை பாதுகாப்பதற்கான தேவை தகவல் சட்டங்களின் சுதந்திரத்தில் கூட பரவலாக அங்கீகரிக்கப்படுகின்றது, அது நம்பிக்கையில் பெறப்பட்ட வணிகத் தகவலை வெளியிடுவதற்கான விதிவிலக்கினை உள்ளடக்குகின்றது.

மற்றும் வாடிக்கையாளர்களின் சட்டபூர்வமான வர்த்தக நலன்களை பாதுகாக்க வேண்டும். இந்தக் கொள்கையானது பல்வேறு தரப்பினர்களின் உரிமைகள் மற்றும் நலன்களை சமப்படுத்துகின்ற வரையறுக்கப்பட்ட ஒரு தொகுதி விதிவிலக்குகளை வழங்குகின்றது. எவ்வாறாயினும், ஆ.அ.வ. விதிவிலக்கான சூழ்நிலைகளில், கொள்கை விதிவிலக்குகளைப் புறக்கணிக்க (பந்தி 6) அல்லது சாதாரணமாக அது வெளிப்படுத்தும் தகவலை (பந்தி 7) வெளிப்படுத்தாதிருப்பதற்கான உரிமையைக் கொண்டிருக்கின்றது.

(iv) **முன்னெச்சரிக்கையான வெளிப்படுத்துகை.** ஆ.அ.வ. அதன் செயற்பாடுகள் பற்றி அதன் அறிவுசார் தயாரிப்புகள் மற்றும் தகவல்களை ஆ.அ.வ. யின் தீர்மானம் மேற்கொள்வதில் பங்கேற்பதற்கு வசதியாக முன்னெச்சரிக்கையாக பகிர்கின்றது. ஆ.அ.வ. யின் இணையத்தளமானது முன்னெச்சரிக்கையான வெளிப்படுத்துகைக்கு முதன்மை ஊடகமாக இருக்கின்ற அதேவேளை, ஆ.அ.வ. பிற பொருத்தமான வழிமுறைகளையும் தகவலை தெரிவிப்பதற்கும் வெளிப்படுத்துவதற்கும் பயன்படுத்துகின்றது.

(v) **தகவல் மற்றும் எண்ணங்கைளைப் பகிர்தல்.** இந்த த.அ.கொ. ஆ.அ.வ. யின் செயற்பாடுகள் பற்றிய தகவல்கள் மற்றும் எண்ணக்கருக்களை மக்கள் சமமாக தேட, பெற்றுக் கொள்ள, மற்றும் தெரிவிப்பதற்கான செயல்முறைகளை உள்ளடக்குகின்றது. பங்குதாரர்களுடனான செயல்திறனான தொடர்பாடல்கள் மற்றும் தகவல்களையும் எண்ணக்கருக்களையும் பரிமாற்றிக் கொள்வது பயனுறுதியானதும் நிலைபேறானதுமான அபிவிருத்தியின் ஒரு முக்கிய அங்கமாகும்.

(vi) **திட்ட-பாதிப்புக்கு உள்ளான மக்கள் மற்றும் மற்றைய பங்குதாரர்களுக்கு தகவல் வழங்குதல்.** ஆசிய அபிவிருத்தி வங்கி, ஆ.அ.வ. திட்டங்கள் பற்றி திட்ட-பாதிப்புக்கு உள்ளான மக்கள் மற்றும் மற்றைய பங்குதாரர்களுடன் இரு-வழி தொடர்பாடல்களை உறுதிப்படுத்துவதற்கு, அதன் கடனாளிகள் மற்றும் வாடிக்கையாளர்களுடன் நெருக்கமாக பணியாற்றுகின்றது. இது ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில், சம்பந்தப்பட்ட மொழிகளில்,[9] திட்ட-பாதிப்புக்கு உள்ளான மக்கள் மற்றும் பிற பங்குதாரர்கள் திட்ட வடிவமைப்பு மற்றும் செயல்பாட்டில் அர்த்தமுள்ள உள்ளீடுகளை வழங்குவதற்கு அனுமதிக்கும் விதமாக மேற்கொள்ளப்படுகின்றது.

---

[9] ஆ.அ.வ. யின் மொழிபெயர்ப்பு வழிகாட்டி ஆவணங்கள் அரசகரும மற்றும் தேசிய மொழிகளில் மொழிபெயர்க்கப்படுவதனை அனுமதிக்கின்றது. நாட்டு அலுவலகத்தினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு விடய அடிப்படையில் உள்ளூர் மொழிகள் பயன்படுத்தப்பட முடியும்.

(vii) **நாடு மற்றும் வாடிக்கையாளர் உரிமை.** ஆ.அ.வ. யின் கடனாளிகள் மற்றும் வாடிக்கையாளர்கள் ஆ.அ.வ. ஆதரவளிக்கின்ற அல்லது வங்கி முதலீடு செய்கின்ற திட்டங்களுக்கு சொந்தக்காரர்களாக உள்ளனர். ஆகையால், சில சந்தர்ப்பங்களில், ஆவணங்களை வெளிப்படுத்தப்படுவதற்கு முன்னர் வெளிப்படுத்தும் உள்ளடக்கம் மற்றும் நேரம் தொடர்பாக கடனாளிகள் மற்றும் வாடிக்கையாளர்களின் கருத்துக்கள் பரிசீலிக்கப்படுகின்றன.

(viii) **தெளிவான மேன்முறையீட்டு செயல்முறை.** கோரப்பட்ட தகவலை வெளிப்படுத்துவதில்லை என்ற ஆ.அ.வ. யின் தீர்மானத்திற்கு மேன்முறையீடு செய்யும் ஒரு தெளிவான செயல்முறை ஒரு அர்த்தமுள்ள வெளிப்படுத்தற் கட்டமைப்பின் முக்கியமானதொரு பகுதியாகும்.

(ix) **தொடர்ச்சியான கண்காணிப்பு.** ஆ.அ.வ. கொள்கையின் செயல்திறனை கண்காணிக்கிறது, அதன் வெற்றி மற்றும் தோல்விகளில் இருந்து பாடங்களைக் கற்றுக்கொள்கின்றது, மேலும் புதிய தொழில்நுட்பம் மற்றும் நடைமுறைகளுடன் பின்தங்காதிருக்கின்றது.

## ஆ. வெளிப்படுத்தலுக்கான விதிவிலக்குகள்

16. ஆசிய அபிவிருத்தி வங்கி அதன் வசமுள்ள எந்த கொள்கை விதிவிலக்குகளின் கீழும் வராத தகவல்களை வெளிப்படுத்துகின்றது. இந்த விதிவிலக்குகள் குறிப்பிட்ட வகையான தகவல்களின் வெளிப்படுத்துகை குறித்த தரப்புக்களுக்கு அல்லது நலன்களுக்கு விளைவிக்கும் தீங்கினை விட வெளிப்படுத்துகையின் நன்மைகள் அதிகமாக இருக்கும் என்ற ஆசிய அபிவிருத்தி வங்கியின் உறுதிப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஒரு தீங்கு-நன்மை மதிப்பீடு சாத்தியமான வெளிப்படுத்துகையின் பாதகமான விளைவுகளை வெளிப்படுத்துகையில் இருந்து சேரும் நன்மைகளுக்கு எதிராக எடை போடப்படும் ஒரு செயல்முறையாகும். ஆ.அ.வ. யின் வெளிப்படுத்துகை கோட்பாடுகளின் சூழலில் (பந்தி 3) – குறிப்பாக வெளிப்படுத்துகைக்கு ஆதரவான துணிபு – வெளிப்படுத்தாமைக்கான அடிப்படை மற்றும் மதிப்பீடு போன்றன பந்தி 5 இல் விவரிக்கப்பட்டுள்ள தகவல் வகைகளுக்கு மட்டுப்படுத்தப்படுகின்றது. ஒரு ஆவணம் அல்லது ஆவணமொன்றின் பகுதி ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கொள்கை விதிவிலக்குகளின் கீழ் வரும் தகவல்களைக் கொண்டிருப்பதனால்

வெளிப்படுத்தப் போவதில்லை எனில், ஆ.அ.வ. வெளிப்படுத்தாமைக்கான விதிவிலக்கினை/விதிவிலக்குகளை மேற்கோள் காட்டும்.

17. தகவல் அறிதல் கொள்கையின் நேர்மறையான புறக்கணிப்பு தொடர்பான ஏற்பாடுகளுக்கு உட்பட்டு (பந்தி 6), பின்வரும் தகவல்கள் அல்லது ஆவணங்கள் வெளிப்படுத்தப்படுவதில்லை.

### 1. திட்டநோக்குடைய மற்றும் தீர்மானம்- மேற்கொள்ளும் செயல்முறை

ஆ.அ.வ. யின் நிதானித்த அல்லது தீர்மானம்-மேற்கொள்ளும் செயல்முறையை அறிவிக்கும் தகவல் பொதுவாக வெளிப்படுத்துகையில் இருந்து விலக்கப்படுகின்றது. இந்த வகையான விதிவிலக்கு திட்டநோக்கு, விவாதங்கள், மற்றும் ஆலோசனைகள் தீர்மானம் மேற்கொள்ளுதல் சுயாதீனமானதாகவும் நேர்மையானதாகவும் இருக்க வேண்டுமென அறிவிக்கும் எடுகூற்றினை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது. இது பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது:

(i) உள்ளக தகவல்கள், வெளிப்படுத்தப்பட்டால், ஆ.அ.வ. யின் திட்டநோக்குடைய மற்றும் தீர்மானம்-மேற்கொள்ளும் செயல்முறையை, எண்ணக்கருக்கள், கருத்துக்கள், மற்றும் அணுகுமுறைகளின் நேர்மையான பரிமாற்றத்தைத் தடுப்பதன் மூலம் நேர்மைத்திறனை சமரசத்திற்கு உட்படுத்துவது அல்லது உட்படுத்தும் சாத்தியம் உள்ளமை மற்றும் அதன் மூலம் ஆ.அ.வ. மற்றும் அதன் பங்குதாரர்களுக்கான தீர்மானங்கள் மற்றும் விளைவுகளை மோசமாக பாதிப்புக்கு உட்படுத்தும். உதாரணங்கள் சபை உறுப்பினர்கள், பணிப்பாளர்கள், ஆலோசகர்கள், முகாமைத்துவ உறுப்பினர்கள், ஆ.அ.வ. பணியாளர்கள், மற்றும் ஆ.அ.வ. ஆலோசகர்கள் ஆகியோர்கள் இடையேயான பொதுவான திட்டநோக்குடைய அறிவுறுத்தல்கள் மற்றும் எண்ணங்கள் பரிமாற்றத்தை உள்ளடக்கும். ஆ.அ.வ. பொதுவாக அதன் தீர்மானம்-மேற்கொள்ளும் செயல்முறைகளின் முடிவுகளை பொதுவாக வெளிப்படுத்துகின்ற அதேவேளை, அது அத்தகைய தீர்மானங்களுக்கு இட்டுச்சென்ற அனைத்து எண்ணக்கருக்கள், கருத்துக்கள் மற்றும் அணுகுமுறைகளை வெளிப்படுத்தாது, ஏனெனில் பங்குதாரர்கள் அந்தக் எண்ணக்கருக்கள், கருத்துக்கள், மற்றும் அணுகுமுறைகளை சுயாதீனமாக சமர்ப்பித்து விவாதிக்க வேண்டியுள்ளது.

(ii) பணிப்பாளர் சபையின் நடவடிக்கைகள்,[10] சபை பத்திரங்கள் தவிர்ந்த,[11] வார்த்தை மாறாமல் எழுதப்பட்ட நகல்கள்,[12] சபை கூட்டங்களின் கூட்டக்குறிப்புகள்,[13] மற்றும் குறித்த சபை கூட்டங்கள் பற்றிய தலைவரின் சுருக்கக்குறிப்புகள்,[14] ஆகிய ஆவணங்கள் வெளிப்படுத்தப்படுகின்ற போது அது சபை உறுப்பினர்கள் இடையே வெளிப்படையாக எண்ணக்கருக்கள், கருத்துக்கள் மற்றும் அணுகுமுறைகள் பரிமாறப்படுவதனை தடுக்கும்.

(iii) ஆ.அ.வ. மற்றும் அதனுடைய உறுப்பினர்கள் மற்றும் ஆ.அ.வ. உடன் ஒத்துழைக்கும் பிற நிறுவனங்களிடையேயான நிதானித்த மற்றும் தீர்மானம் மேற்கொள்ளும் செயல்முறைகளில் இருந்து பரிமாற்றப்பட்ட, தயாரிக்கப்பட்ட, அல்லது பெறப்பட்ட தகவல்கள். அவை வெளிப்படுத்தப்பட்டால், அந்தத் தகவல்கள் ஆ.அ.வ. யினதும்

---

10 ஆசிய அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர்கள் சபையின் செயல்முறைகளின் விதிகளின் பிரிவு 9 ற்கு இணங்க பணிப்பாளர்கள் சபை நடவடிக்கைகள் இரகசியமானவை. இந்தக் கொள்கையின் நோக்கத்திற்காக, பணிப்பாளர்கள் சபை நடவடிக்கைகள் என்ற சொற்பதம் கூட்டத்திற்காக அல்லது கூட்டத்தில் உருவாக்கப்பட்ட எந்தவொரு ஆவணம் மற்றும் பணிப்பாளர்கள் சபை மற்றும் பணிப்பாளர்கள் குழுக்களின் பரிசீலனைகள் என்பனவற்றைக் குறிப்பதுடன் சபை பத்திரங்கள் (பணிப்பாளர்கள் சபையின் தகவலுக்காக, கலந்துரையாடலுக்காக, அல்லது பரிசீலனைக்காக விநியோகிக்கப்பட்ட ஆவணங்கள்) மற்றும் சபைக் கூட்டங்களின் போது மேற்கொள்ளப்பட்ட அல்லது பூரணப்படுத்தப்பட்ட கூற்றுக்கள், வார்த்தை மாறாது எழுதப்பட்ட நகல்கள், கூட்டக்குறிப்புக்கள், மற்றும்/ அல்லது குழு கூட்டங்களில் தலைவரின் சுருக்கக்குறிப்புக்கள், மற்றும் ஆ.அ.வ. முகாமைத்துவத்திற்கும் திணைக்களங்கள், அல்லது செயலாளர் மற்றும் சபை, சபைக் குழுக்கள், மற்றும்/ அல்லது நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் அலுவலகம் ஆகியவற்றிற்கு இடையேயான இலத்திரனியல் உட்பட அனைத்து வடிவிலான புரிந்துணர்வுகள் அல்லது வேறு தொடர்பாடல்கள் போன்ற சபை பதிவேடுகள் ஆகியனவற்றை உள்ளடக்கும்.

11 கொள்கை விதிவிலக்குகளினால் கட்டுப்படுத்தப்படாவிட்டால், பணிப்பாளர்கள் சபையின் தகவலுக்காக விநியோகிக்கப்பட்ட ஆவணங்கள் விநியோகத்தின் போது இணையத்தளத்தில் வெளியிடப்படும். சபையின் பரிசீலனைக்காக விநியோகிக்கப்பட்ட ஆவணங்கள் சபையின் ஒப்புதலுடன் அல்லது புறக்குறிப்புடன் பொதுவாக வெளிப்படுத்தப்படும்.

12 பணிப்பாளர்கள் சபையின் முறையான கூட்டங்களின் வார்த்தை மாறாது எழுதப்பட்ட நகல்கள், 2 ஏப்பிரல் 2012 அன்று அல்லது அதன் பின்னர் முறையான கூட்டங்கள் நடைபெற்றிருந்து தகவல் அறிதலுக்கான குழு அவை இந்த கொள்கை விதிவிலக்குகளுக்கு உட்படுகின்ற எந்தத் தகவலையும் கொண்டிருக்கவில்லை அல்லது குறிக்கவில்லை எனத் தீர்மானிக்கும் பட்சத்தில், வேண்டுகோளின் பேரில் அவை உருவாக்கப்பட்ட திகதியிலிருந்து 10 வருடங்களின் பின்னர் முற்றாக வெளிப்படுத்தப்படலாம்.

13 ஒவ்வொரு கிரமமான பணிப்பாளர்கள் சபை கூட்டத்தின் கூட்டக்குறிப்புக்கள் மூல சபை கூட்டத்தின் பின்னர் 60 நாட்காட்டி நாட்களுக்குப் பிந்தாமல் கூட்டக்குறிப்பு சபையினால் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் வெளிப்படுத்தப்படுகின்றது. இது 1 செப்தெம்பர் 2005 அன்று அல்லது அதன் பின்னர் நடைபெற்ற கிரமமான கூட்டங்களுக்குப் பொருந்தும்.

14 ஒவ்வொரு பணிப்பாளர்கள் சபையினதும் நாட்டுக் கூட்டாண்மை மூலோபாயம் மற்றும் பிராந்திய ஒத்துழைப்பு மூலோபாயம் தொடர்பான கலந்துரையாடல், மற்றும் சபையினால் ஒரு முறையான சபைக் கூட்டத்தில் ஒப்புதலளிக்கப்பட்ட அல்லது ஆமோதிக்கப்பட்ட ஒவ்வொரு கொள்கை அல்லது மூலோபாயம் ஆகியனவற்றின் சுருக்கக்குறிப்புகள் அவை சபைக்கு விநியோகிக்கப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் வெளிப்படுத்தப்படுகின்றன.

அதன் உறுப்பினர்கள் அல்லது ஆ.அ.வ. ஒத்துழைப்பு வழங்கும் மற்றைய நிறுவனங்களிடையேயான நேர்மையான எண்ணக்கருக்கள், கருத்துக்கள் மற்றும் அணுகுமுறைகளின் பரிமாற்றத்தினைத் தடுப்பதன் மூலம் திட்டநோக்குடைய மற்றும் தீர்மானம்-மேற்கொள்ளும் செயல்முறையின் நேர்மைத்திறனை சமரசத்திற்கு உட்படுத்தும் அல்லது உட்படுத்தும் சாத்தியம் உள்ளது.

## 2. நம்பிக்கையில் வழங்கப்பட்ட தகவல்

(iv) ஆ.அ.வ. க்கு ஒரு உறுப்பினர் அல்லது பிற தரப்பினரால் நம்பிக்கையின் அடிப்படையில் வழங்கப்பட்ட தகவல். அத்தகைய தகவலை பாதுகாப்பதற்கு ஆ.அ.வ. கடமைப்பட்டிருப்பதுடன் அந்த மறு தரப்பின் அல்லது உறுப்பினரின் எழுத்து மூலம் வெளிப்படுத்தப்பட்ட அனுமதியின்றி அந்தத் தகவலை வெளிப்படுத்துவதில்லை.

(v) தனியுரிமை தகவல் அல்லது தரப்பொன்றினால் ஆ.அ.வ. க்கு வழங்கப்பட்ட யாதாயினும் ஒரு தகவல், வெளிப்படுத்தப்பட்டால், அந்தத் தரப்பின் வர்த்தக நலன்களை, நிதி நலன்களை, அல்லது போட்டியிடும் நிலைமையை அதுவே மூலத் தகவலாக இருந்ததனால் பொருளாதார ரீதியாகப் பராபட்சமாகப் பாதிக்கும் அல்லது பாதிக்கும் சாத்தியம் உள்ளது அல்லது பிறிதொரு தரப்பு தகவல் வெளிப்படுத்தப்படுவதனால் பாதிக்கப்படலாம்.

(vi) நம்பகத்தன்மையின் அடிப்படையிலான உடன்படிக்கையொன்றினால் உள்ளடக்கப்பட்ட இரகசிய வியாபாரத் தகவல் அல்லது ஆ.அ.வ. வாடிக்கையாளர்களுடன் அல்லது வேறு தொடர்புடைய தரப்பினருடன் ஏற்படுத்திக்கொண்ட வெளிப்படுத்தாமை உடன்படிக்கை.

## 3. தனிப்பட்ட தகவல்

(vii) எந்த தனிப்பட்ட தகவல், சம்பந்தப்பட்ட நபர் அல்லது ஆ.அ.வ. யின் விதிமுறைகளினால் அனுமதிக்கப்பட்ட அளவினைத் தவிர, வெளிப்படுத்தியிருந்தால், சம்பந்தப்பட்ட நபரின் சட்டபூர்வமான தனியுரிமை நலன்களை பொருள்ரீதியாக சமரசத்திற்கு உள்ளாகும் அல்லது உள்ளாக்கும் சாத்தியம் உள்ளது. சில எடுத்துக்காட்டுகள் அவர்களுடைய நியமனம் மற்றும் தெரிவு செயல்முறை, வேலைவாய்ப்பு விதிமுறைகள், செயல்திறன் மதிப்பீடு, தனிப்பட்ட மருத்துவ தகவல், தனிப்பட்ட தொடர்பாடல்கள், உள்ளக முரண்பாட்டு தீர்வு மற்றும் மேன்முறையீட்டு பொறிமுறைகளின் நடவடிக்கைகள் தொடர்பான தகவல், மற்றும் விசாரணை தொடர்பான தகவல்கள்.

### 4. நிதிசார் தகவல்

(viii) நிதிசார் தகவல் அது, வெளிப்படுத்தப்பட்டால், ஆ.அ.வ. யின் சட்டபூர்வமான நிதிசார் அல்லது வர்த்தக நலன்கள் மற்றும் அதன் செயற்பாடுகளை பாரபட்சமாக பாதிக்கும் அல்லது பாதிக்கும் சாத்தியம் உள்ளது. சில எடுத்துக்காட்டுகள் ஆ.அ.வ. யின் எதிர்கால கடன் பெறல் மதிப்பீடுகள், நிதிசார் கணிப்புகள், ஆ.அ.வ. யின் திறைசேரி செயற்பாடுகளுக்கான தனிப்பட்ட முதலீட்டு தீர்மானங்கள் தொடர்பான தரவு, கடன் மதிப்பீடுகள், கடன் தகுதிகளின் பகுப்பாய்வுகள், கடன் வீதங்கள், அதன் கடன் பெறுனர்கள் மற்றும் மற்றைய வாடிக்கையாளர்களின் இடர் மதிப்பீடுகள், மற்றும் மூலதன மற்றும் நிதிச் சந்தைகளைப் பாதிக்கும் ஏதாவது தகவல்கள் என்பனவற்றை உள்ளடக்கும்.

(ix) நிதிசார் தகவல் அது, வெளிப்படுத்தப்பட்டால், உறுப்பு நாடொன்று அதன் பொருளாதாரத்தினை முகாமைத்துவம் செய்யும் திறனை பாரபட்டசமாக பாதிக்கும் அல்லது பாதிக்கும் சாத்தியம் உள்ளது.

### 5. பாதுகாப்பு மற்றும் இடரின்மை

(x) தகவல், அது வெளிப்படுத்தப்பட்டால், எந்த தனிநபரினதும் பாதுகாப்பு, இடரின்மை, உயிர் ஆபத்திற்கு உள்ளாகுதல் அல்லது உள்ளாக்கும் சாத்தியம்; ஆ.அ.வ. யின் சொத்துக்கள் பாதுகாப்பு அல்லது அதற்குப் பாதிப்பின்மை; அல்லது உறுப்பு நாடொன்றின் பாதுகாப்பு அல்லது தேசிய பாதுகாப்பு ஆகியன பாரபட்சமாக பாதிக்கப்படுதல் அல்லது பாதிக்கப்படும் சாத்தியம்.

### 6. சட்ட மற்றும் புலனாய்வு விடயங்கள்

(xi) வழக்கறிஞர்-கட்சிக்காரர் சலுகைக்கு உட்பட்ட ஏதாவது தகவல் (ஆ.அ.வ. சட்ட ஆலோசகர்கள் அல்லது அதன் வெளி சட்ட ஆலோசகர்கள் ஆகியோருக்கு அல்லது அவர்களிடமிருந்தான தொடர்பாடல்கள் உட்பட) அல்லது யாதாயினும் தகவல் அது, வெளிப்படுத்தப்பட்டால், சட்டபூர்வமான வழக்கறிஞர்-கட்சிக்காரர் நலன்களை வலுவிழக்கச் செய்யும் அல்லது வலுவிழக்கச் செய்யும் சாத்தியம் உள்ள அல்லது பொருந்தக்கூடிய சட்டத்தை மீறும் தகவல்கள்.[15]

[15] இது பங்குச் சந்தை மற்றும் வங்கிச் சட்டங்கள், மற்றும் பதிப்புரிமை சட்டத்தினால் ஏற்படுத்தப்பட்ட வரையறைகளை உள்ளடக்கும்.

(xii) ஆ.அ.வ. க்கு வழங்கப்பட்ட மோசடி, ஊழல், அல்லது ஆ.அ.வ. யின் ஊழல்எதிர்ப்பு கொள்கையின்[16] ஏனைய மீறல் அல்லது துர்நடத்தை குற்றச்சாட்டுக்கள் ஆகியன தொடர்பாக ஆ.அ.வ. க்கு வழங்கப்பட்ட தகவல்; அல்லது ஆ.அ.வ. க்கு வழங்கப்பட்ட மோசடி, ஊழல், அல்லது ஆ.அ.வ. யின் ஊழல்எதிர்ப்பு கொள்கையின் ஏனைய மீறல் அல்லது துர்நடத்தை குற்றச்சாட்டுக்கள் ஆகியன தொடர்பான யாதாயினும் விசாரணை தொடர்பாக ஆ.அ.வ. க்கு வழங்கப்பட்ட தகவல்கள். யாதாயினும் தகவல் அது, வெளிப்படுத்தப்பட்டால், ஒரு விசாரணையை அல்லது நீதி நிர்வாகத்தை பாரபட்சமாகப் பாதிக்கும் அல்லது பாதிக்கும் சாத்தியம் உள்ள தகவல்கள்; இரண்டு சந்தர்ப்பங்களிலும், ஆ.அ.வ. யின் விதிமுறைகளுக்கு இணங்க அனுமதிக்கப்பட்ட அளவு தவிர்ந்த, தகவல்கள். குற்றச்சாட்டினை மேற்கொள்ளும் (விசில்ஊதுபவர் அல்லது இரகசியங்களை வெளிக்கொண்டுவருபவர்) ஆளடையாளத்திற்கும் கூட, ஆ.அ.வ. யின் விதிமுறைகளுக்கு இணங்க அனுமதிக்கப்பட்ட அளவு தவிர்ந்த, அல்லது அந்த விசில்ஊதுபவர் அவன் அல்லது அவளின் அடையாளத்தை வெளிப்படுத்த சம்மதித்தாலன்றி, இந்தப் பந்தி பொருந்தும்.

## 7. உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் அறக்கட்டளை நிதிய கணக்காய்வு அறிக்கைகள்[17]

(xiii) (அ) ஆ.அ.வ. யின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அலுவலகத்தின் உள்ளக கணக்காய்வு அறிக்கைகள், உள்ளக முறைமைகள் பற்றிய முக்கிய தகவல்களை அந்த அறிக்கைகள் கொண்டிருப்பதால், அது மூன்றாம் தரப்பினால் ஆ.அ.வ. க்கு இழப்பினை ஏற்படுத்தும் வகையில் பயன்படுத்தப்பட முடியும்; மற்றும் (ஆ) ஆ.அ.வ. யினால்-நிர்வகிக்கப்பட்ட நம்பிக்கை நிதியங்கள் தொடர்பான ஆ.அ.வ. யின் வெளி கணக்காய்வாளர்களின் குறித்த கணக்காய்வு அறிக்கைகள், அங்கு பொருத்தமான கணக்காய்வு

---

16 ஆ.அ.வ. 2010. *நேர்மைத்திறன் மற்றும் ஊழல்எதிர்ப்பு: எமது கட்டமைப்புக் கொள்கைகள் மற்றும் மூலோபாயங்கள்.* மணிலா. https://www.adb.org/sites/default/files/institutional-document/31317/anticorruption-integrity-policy-strategy.pdf; மற்றும் ஆ.அ.வ. 1998. *ஊழல்எதிர்ப்பு கொள்கை.* மணிலா. https://www.adb.org/documents/anticorruption-policy (அவ்வப்போது புதுப்பிக்கப்படலாம்).

17 கணக்காய்வு அபிப்பிராயங்கள் மற்றும் ஆ.அ.வ. யின் *ஆண்டறிக்கையின்* பகுதியாக பொதுமக்களுக்கு வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட நிதி கூற்றுக்கள் இந்த விதிவிலக்குகளில் உள்ளடக்கப்படவில்லை.

நியமங்கள் இந்த அறிக்கைகள் மற்றும் தொடர்பான நிதி கூற்றுக்களின் வெளிப்படுத்தலை மட்டுப்படுத்துகின்றன.[18]

## இ. பொது நலன் புறக்கணிப்பு (நேர்மறையான புறக்கணிப்பு)

18. வெளிப்படுத்தல் விதிவிலக்குகளின் கீழ் வரும் தகவல்களை வெளிப்படுத்துவதனால் ஏற்படும் தீங்கினைவிட தகவலை வெளிப்படுத்துவதில் பொது நலன்கள் முக்கியத்துவமானது என வங்கி தீர்மானித்தால், விதிவிலக்கான சூழ்நிலைகளின் கீழ், ஆ.அ.வ. வெளிப்படுத்தலுக்கான உரிமையைக் கொண்டிருக்கின்றது.

## ஈ. ஆ.அ.வ. யின் அணுகலை கட்டுப்படுத்துவதற்கான தனிச்சிறப்புரிமை (எதிர்மறையான புறக்கணிப்பு)

19. விதிவிலக்கான சூழ்நிலைகளின் கீழ், அது சாதாரணமாக வெளிப்படுத்தும் தகவலை அந்தத் தகவல் வெளிப்படுத்தப்படுவது, வெளிப்படுத்துவதன் நன்மைகளைவிட தீங்கினை ஏற்படும் முக்கியத்துவம் வாய்ந்தது அல்லது சாத்தியம் உள்ளது என வங்கி தீர்மானிக்குமிடத்து, ஆ.அ.வ. வெளிப்படுத்தாதிருக்கும் உரிமையையும் கொண்டிருக்கின்றது. பணிப்பாளர்கள் சபை மாத்திரமே இந்த அதிகாரத்தைப் பயன்படுத்துகின்றது.

## உ. வரலாற்றுத் தகவல்கள்

20. ஆ.அ.வ. செயற்பாடுகள் சம்பந்தமான எந்த தகவலும் அந்த தகவல் ஆ.அ.வ. யினால் உருவாக்கப்பட்ட, அல்லது அதற்கு வழங்கப்பட்ட திகதியில் இருந்து 20 வருடங்களுக்கு மேலாக ஆ.அ.வ. வசம் உள்ளவை வரலாற்றுத் தகவல்கள் என கருதப்படுகின்றன. பணிப்பாளர்கள் சபையினது வரலாற்று நடவடிக்கை குறிப்புகள் வேண்டுகோளின் பேரில் தகவல்

---

[18] குறித்தசில நம்பிக்கை நிதிய நிதிக் கூற்றுக்கள் நன்கொடையாளர்களின் கணக்கியல் கட்டப்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு (அது அமெரிக்காவில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் நியமங்களில் இருந்து வேறுபடலாம்), அமெரிக்காவில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வு செய்யப்படுகின்றன (அது ஆ.அ.வ. க்குப் பொருந்தும்). அத்தகைய கணக்காய்வு நியமங்கள் அமெரிக்காவில் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டவைகளைத் தவிர்ந்த கணக்காய்வு நியமங்களுக்கு இணங்கத் தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் அதனோடு இணைந்த கணக்காய்வு அபிப்பிராயங்கள் நிதியத்தில் ஒரு குறிப்பிட்ட நலன்களின், அதாவது பங்களிப்பாளர்கள் மற்றும் நிதியத்தின் முகாமைத்துவத்திற்கு மற்றும்/ அல்லது நிர்வகித்தலுக்குப் பொறுப்பானவர்களின், வெளிப்படுத்தலை மட்டுப்படுத்துகின்றன.

அறிதலுக்கான குழு (த.அ.கு.), பந்தி 5.1.(i) இல் உள்ள ஏற்பாடுகளைப் பரிசீலனைக்கு எடுத்து, அந்த சபை நடவடிக்கை குறிப்புக்கள் எந்தக் கொள்கை விதிவிலக்குகளினுள்ளும் வரும் எந்தத் தகவலையும் கொண்டிருக்கவில்லை அல்லது குறிக்கவில்லை எனத் தீர்மானிக்குமிடத்து வெளிப்படுத்தக்கூடியன. பந்தி 5.2 (நம்பிக்கையில் வழங்கப்பட்ட தகவல்), 5.3 (தனிப்பட்ட தகவல்), 5.5 (பாதுகாப்பு மற்றும் இடரின்மை தகவல்), அல்லது 5.6 (சட்ட மற்றும் புலனாய்வு வியங்கள்) ஆகிய பந்திகளின் கீழ் பட்டியலிடப்பட்ட விதிவிலக்குகளின் கீழ் வரும் தகவல்கள் தவிர, அவை வெளிப்படுத்தலிலிருந்து விதிவிலக்கப்பட்டவை ஆக இருக்கும், அனைத்து தகவல்களும் வேண்டுகோளின் பேரில் வெளிப்படுத்தக்கூடியன.

# IV. தகவல் கோரல்கள் மற்றும் மேன்முறையீடுகள்

## அ. தகவல் கோரல்

21. தகவல் மற்றும் ஆவணங்களுக்கான அனைத்து வேண்டுகோள்களும் எழுத்து மூலமானதாக இருக்க வேண்டும். வேண்டுகோள்கள் ஆ.அ.வ. தலைமைச்செயலகம், ஒரு வதிவிடப் பணிமனை, அல்லது எந்த ஆ.அ.வ. திணைக்களம் அல்லது அலுவலகத்திற்கு நெறிப்படுத்தப்பட்டதாக இருக்கலாம். தகவல் கோரல்களை எங்கு அனுப்ப வேண்டுமென்ற விபரங்கள் ஆ.அ.வ. யின் இணையத்தளத்தில் உள்ளன. வேண்டுகோள்கள் கோரப்படும் தகவலின் நியாயமான விவரக்குறிப்புகளை ஆ.அ.வ. யினால் நியாயமான காலத்தினுள்ள தகவலை கண்டறிவதனை இயலச்செய்வதற்காக குறிப்பிடப்படல் வேண்டும்.

22. வேண்டுகோள்கள் ஆ.அ.வ. க்கு ஆங்கிலத்தில் அல்லது ஆ.அ.வ. உறுப்பு நாடுகளின் யாதாயினும் அரசகரும அல்லது தேசிய மொழிகளில் சமர்ப்பிக்கப்படலாம்.[19]

23. ஆ.அ.வ. முறையாக மேற்கொள்ளப்படாத வேண்டுகோளுக்கு அல்லது பொதுவான வேண்டுகோள்கள், அல்லது ஆ.அ.வ. யினால் உருவாக்க வேண்டிய, தயாரிக்க வேண்டிய, அல்லது ஏற்கனவே இல்லாத இணக்கப்பட வேண்டிய தகவல் அல்லது தரவு அல்லது அதன் ஆவணப்பதிவுகள் முறைமையில் கிடைக்கப்பெறாத எந்தக் கோரிக்கையுடனும் இணங்க வேண்டிய அவசியமில்லை. இது ஆ.அ.வ. முன் கோரிக்கையின் பின்னர் தகவலை வழங்கியிருந்தால் அல்லது தகவல் வழங்க முடியாத காரணங்களை வழங்கியிருந்தால் அதே நபர், நிறுவனம், அல்லது குழுவிலிருந்து அதே விடயத்தில் தகவல் கோருவதற்கும் பொருந்தும்.

24. ஆ.அ.வ. உடனடியாக ஒரு கோரிக்கை பெறப்பட்டதனை ஏற்றுக்கொண்டு கோரிக்கை மீதான அதன் தீர்மானத்தை அறிவிக்கும்.[20] சிக்கலான

---

[19] வேண்டுகோள்களுக்கான ஆ.அ.வ. யின் பதில்களுக்கான நியம மொழியாக ஆங்கிலம் பயன்படுத்தப்படுகின்றது. உள்ளூர் சூழ்நிலைகளைப் பொறுத்து பதில்கள் மொழிபெயர்க்கப்படலாம்.

[20] இங்கு ஆ.அ.வ. பந்தி 6 (நேர்மறையான புறக்கணிப்பு) அல்லது பந்தி 7 (எதிர்மறையான புறக்கணிப்பு) கீழ் வரும் அதன் தனிச்சிறப்புரிமையை பயன்படுத்துகின்றது, ஒரு இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டவுடன் ஆ.அ.வ. கோரிக்கையாளருக்கு அறிவிக்கும். கோரிக்கையாளர், பொருத்தமானவிடத்து, யாதாயினும் நீடிப்புப் பற்றி அறிவிக்கப்படுவார்.

தகவல்களுக்கு,[21] கோரிக்கைக்கு பதிலளிப்பதற்கான காலக்கெடுவை, கோரிக்கையாளருக்கு காலகெடு நீடிப்புத் தொடர்பில் அறிவிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளுமிடத்து, நீடிக்கும்.

## ஆ. தகவல் அறிதலுக்கான குழு

25. தகவல் அறிதலுக்கான குழு (த.அ.கு.) கொள்கை மற்றும் அதன் செயலாக்க ஒழுங்குகளை விளக்குவது, கண்காணிப்பது, மற்றும் மீளாய்வு செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு மேற்பார்வைக் அமைப்பாகும். இது தலைவரினால் நியமிக்கப்பட்ட சிரேஷ்ட ஆ.அ.வ. ஊழியர்களை உள்ளடக்கியதாக இருப்பதுடன் அது தலைவருக்கு அறிக்கையிடும். ஆ.அ.வ. யின் திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களினால் மறுக்கப்பட்ட தகவலுக்கான கோரிக்கைகளை மீளாய்வு செய்வதற்கு தேவைக்கு ஏற்றவாறு த.அ.கு. கூடும். த.அ.கு. மேன்முறையீடுகள் சம்பந்தமாக பரிசீலனை செய்து தீர்மானங்களை மேற்கொள்ளும் (பந்தி 16). த.அ.கு. (i) ஆ.அ.வ. திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களினால் மேற்கொள்ளப்பட்ட தகவல் அறிதலுக்கான அணுகலை மறுக்கும் தீர்மானங்களை கடைப்பிடிக்கும் அல்லது மாற்றும் மற்றும் (ii) கொள்கை விதிவிலக்கு ஒன்றினால் உள்ளடக்கப்பட்ட தகவலை பொது நலனில் வெளிப்படுத்தக் கோரும் கோரிக்கைகளை பரிசீலனை செய்யும் (பந்தி 6).

## இ. மேன்முறையீடுகள்

26. ஆ.அ.வ. இரண்டு-கட்ட மேல்முறையீடுகள் செயல்முறையைக் கொண்டிருக்கின்றது அதனைத் தகவல் கோருவோர் இந்த கொள்கையை மீறி ஆ.அ.வ. தகவலுக்கான அவர்களின் கோரிக்கையை மறுத்திருந்தது என அவர்கள் நம்பினால் பயன்படுத்த முடியும். மேன்முறையீடுகளை எங்கு அனுப்ப வேண்டும் என்ற விபரங்கள் ஆ.அ.வ. யின் இணையத்தளத்தில் உள்ளன. வேண்டுகோள் விடுப்பவருக்கான தீர்வு அவரின் எந்த மேன்முறையீடுகளையும் மேவி கோரிய தகவலை பெற்றுக் கொள்வதற்கு மட்டுப்படுத்தப்படுகின்றது.

---

[21] சிக்கலான கோரிக்கைகள் பலமடங்கு ஆதாரங்களில் இருந்து நாடப்படும் தகவல், பாரிய எண்ணிக்கையிலான ஆவணங்கள், பல வருடங்களுக்கு மேலான தகவல் சேகரிப்பு, சேகரித்து ஒன்றுசேர்ப்பது, மற்றும் மூலத் தரவினைத் தொடர்புபடுத்துதல், மற்றும் முடிவுகளை வழங்குதல் என்பனவற்றை உள்ளடக்கும்.

27. இரண்டு-கட்ட மேன்முறையீட்டு செயல்முறை பின்வருமாறு.

### 1. முதல் கட்டம்: தகவல் குழுக்கான அணுகல்

28. ஆ.அ.வ. யினால் தகவல் அறிதலுக்கான அணுகல் மறுக்கப்பட்ட கோரிக்கையாளர் ஒருவர் அவர் (i) இந்தக் கொள்கையில் முன்வைக்கப்பட்ட தேவையான செயல்முறைகளுக்கு இணங்க தகவலுக்கான ஆரம்பக் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டமையைக் காட்ட முடிவதுடன் (ii) கோரப்பட்ட தகவல் அறிதலுக்கான அணுகலை மறுத்ததன் மூலம் ஆ.அ.வ. இந்த கொள்கையை மீறியுள்ளது என ஒன்றில் நியாயமான வாதத்தை வழங்குவது அல்லது பந்தி 6 இல் விவரிக்கப்பட்டவாறு பொது நல வழக்கொன்றை கொள்கை விதிவிலக்கினை(களை) புறக்கணிக்க மேற்கொண்டால் த.அ.கு. ற்கு மேன்முறையீடு ஒன்றினைப் பதிவு செய்யலாம்.

### 2. இரண்டாம் கட்டம்: சுயாதீன மேன்முறையீட்டு குழு

29. த.அ.கு. தகவலுக்கான கோரிக்கையை நிராகரிப்பதற்கு ஆரம்ப தீர்மானத்தைக் கடைப்பிடித்தால், கோரிக்கையாளர் ஆ.அ.வ. தகவல் வழங்கலை நிறுத்தி வைத்துக்கொள்வதன் மூலம் அதன் கொள்கையை மீறியுள்ளதாக இன்னமும் நம்பினால் சுயாதீன மேன்முறையீடுகள் குழுவிற்கு (சு.மே.கு.) மேன்முறையீடு ஒன்றினைப் பதிவு செய்யலாம். சு.மே.கு., த.அ.கு. வின் தீர்மானத்தை கடைப்பிடிக்க அல்லது மறுபரிசீலனை செய்வதற்கான அதிகாரத்தைக் கொண்டுள்ளது. சு.மே.கு. வின் தீர்மானம் இறுதியானது.

30. (i) பொது நல புறக்கணிப்பின் அடிப்படையிலான மேன்முறையீடாக இருந்தால் பணிப்பாளர் சபையினால் அல்லது தலைவரினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களைப் புறக்கணிக்கும் அல்லது (ii) பணிப்பாளர்கள் சபை அதன் தனிச்சிறப்புரிமையைப் பயன்படுத்தி சாதாரணமாக வெளிப்படுத்தப்படும் தகவல் அறிதலுக்கான அணுகலை மட்டுப்படுத்தும் தீர்மானங்கள் தொடர்பான மேன்முறையீடுகளைப் பரிசீலனை செய்வதற்கு சு.மே.கு. ற்கு அதிகாரம் இல்லை.

31. சு.மே.கு., ஆ.அ.வ. இலிருந்து சுயாதீனமான தகவல் அறிதலுக்கான அணுகல் தொடர்பான வெளிவாரி வல்லுநர்கள் மூவரைக் கொண்டிருக்கும். ஆ.அ.வ. யின் தலைவர் பணிப்பாளர்கள் சபையின் ஒப்புதலுடன் சு.மே.கு. ற்கு உறுப்பினர்களை நியமிப்பார்.

### 3. மேன்முறையீடுகளின் சமர்ப்பிப்பு மற்றும் தீர்மானங்களை அறிவித்தல்

32. த.அ.கு. ற்கான அனைத்து மேன்முறையீடுகளும் தகவல் அறிதலுக்கான அணுகலை மறுத்த ஆ.அ.வ. யின் ஆரம்ப தீர்மானத்தின் பின்னர் 90 நாட்காட்டி நாட்களுக்குள் எழுத்து மூலம் பதிவுசெய்யப்பட வேண்டும். சு.மே.கு. ற்கான அனைத்து மேன்முறையீடுகளும் தகவல் அறிதலுக்கான அணுகலை மறுத்த ஆ.அ.வ. யின் ஆரம்ப தீர்மானத்தினை கடைப்பிடிப்பதாக த.அ.கு. வின் தீர்மானத்தின் பின்னர் 90 நாட்காட்டி நாட்களுக்குள் எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். 90-நாள் காலத்திற்கு மேல் மேன்முறையீடு ஒன்றினைப் பதிவதற்காக பெறப்பட்ட மேன்முறையீடுகள் பரிசீலிக்கப்படமாட்டாது. அனைத்து மேன்முறையீடுகளும் பின்வருவனவற்றைக் கொண்டிருக்க வேண்டும்.

(i) ஆரம்பத்தில் கோரப்பட்ட தகவலின் விபரங்கள், மற்றும்

(ii) ஆ.அ.வ. இந்தக் கொள்கையை மீறியதான அல்லது பொது நல புறக்கணிப்பு பிரயோகமாகும் என்ற கோருபவரின் கூற்றிற்கு ஆதரவாக உண்மைகள் மற்றும் சந்தர்ப்பங்களை விவரிக்கும் ஒரு விளக்க அறிக்கை.

33. மேன்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டால் தகவல் கோருபவர்கள் (i) தேவையான காலத்தில் வழக்கினைப் பதிவுசெய்யத் தவறியமை, (ii) மேன்முறையீட்டினை நியாயமாக ஆதரிக்கும் போதுமான தகவலை வழங்கத் தவறியமை, அல்லது (iii) மேன்முறையீடு செய்யப்படுகின்ற விடயத்தினைப் பரிசீலனை செய்வதற்கு த.அ.கு. அல்லது சு.மே.கு. ற்கு அதிகாரம் இல்லை என்பதனால் மேன்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது என அறிவிக்கப்படுவர்.

## ஈ. தகவல் அறிதலுக்கான கொள்கைக்கும் ஏனைய கொள்கைகளும் இடையேயான தொடர்பு

34. இந்தக் கொள்கையிலுள்ள யாதாயினும் ஆ.அ.வ. யின் வேறு கொள்கைகளை குறிக்குமாயின் அந்த மற்றைய கொள்கைகள் அவ்வப்போது திருத்தப்படுவதனையும் உள்ளடக்குகின்றது.

## உ. இணக்க ஆய்வு

35. த.அ.கொ. மேன்முறையீடுகள் செயல்முறைக்கு உட்பட்டது (பந்திகள் 14-21). இந்த த.அ.கொ. ஆ.அ.வ. யின் பொறுப்புக்கூறும் பொறிமுறைக் கொள்கையின் அர்த்தத்தில் ஒரு “செயல்பாட்டுக் கொள்கை” ஆகும். ஆகையால், ஒரு திட்டத்தின் உருவாக்கம், செயல்முறை, அல்லது செயல்பாட்டின் போக்கில் ஆ.அ.வ. இந்தக் கொள்கையை மீறுவதாக திட்டப்-பாதிப்புக்கு உள்ளான மக்களினால் மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகள் ஆ.அ.வ. யின் பொறுப்புக்கூறல் பொறிமுறைக் கொள்கையின் கீழ் பதிவு செய்ய முடியும்.[22]

[22] பொறுப்புக்கூறும் பொறிமுறை ஆ.அ.வ.-உதவியளிக்கப்பட்ட திட்டங்களினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர்களின் பிரச்சினைகளை கூறி தீர்வுகளை நாட மற்றும் ஆ.அ.வ. யின் செயல்பாடுசார் கொள்கைகள் மற்றும் செயல்முறைகளுடன் இணங்காமை தொடர்பான குற்றச்சாட்டுக்களை அறிக்கையிடுவதற்குமான ஒரு களத்தினை வழங்குகின்றது. ஆ.அ.வ. *பொறுப்புக்கூறும் பொறிமுறை.* https://www.adb.org/site/accountability-mechanism/main

# V. கொள்கை கண்காணிப்பு மற்றும் திருத்தங்கள்

36. ஆ.அ.வ. கொள்கை அமுலாக்கத்தினைக் கண்காணித்து ஆண்டறிக்கைகளை அதன் இணையத்தளத்தில் வெளியிடும். இந்தக் கொள்கைக்கான திருத்தங்கள் அவ்வப்போது பணிப்பாளர்கள் சபையின் ஒப்புதலுடன் மேற்கொள்ளப்படலாம்.

# VI. கொள்கை நடைமுறைப்படுத்தற் திகதி

37. இந்த கொள்கை 1 ஜனவரி 2019 அன்று நடைமுறைக்கு வருவதுடன் பொ.தொ.கொ. 2011 இனை மேலோங்கியிருக்கும்.

## About the Asian Development Bank

ADB is committed to achieving a prosperous, inclusive, resilient, and sustainable Asia and the Pacific, while sustaining its efforts to eradicate extreme poverty. Established in 1966, it is owned by 67 members—48 from the region. Its main instruments for helping its developing member countries are policy dialogue, loans, equity investments, guarantees, grants, and technical assistance.

**ASIAN DEVELOPMENT BANK**
6 ADB Avenue, Mandaluyong City
1550 Metro Manila. Philippines
www.adb.org